மனிதனும் — விஞ்ஞானமும்!

Regd. No. M 6207

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - டிசம்பர் 1 * 1953 * | விலை 1 அணா | இதழ் 3

கலைவாணியின் அருள்மொழி

[தனது வாழ்வையே தமிழ்த்தாயின் தொண்டுக்காக அர்ப்பணம் செய்து தவம்பூண்ட ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் "கிராமோதயத்திற்கு" அனுப்பிய செய்தியையும், பாமலரையும் கலைவாணியின் அருள் வாக்காகவே மதித்து கீழே தந்துள்ளோம்.

— ஆசிரியர்]

ஆசிரியர் "கிராமோதயம்" திருப்பூர்.

அன்பீர்,

நான் இங்கே கிராம சேவை செய்கிறேன். "கிராமோதயம்" பண்பும், பயனும் நிரம்பிய நல்லிதழ். அதற்கு இப்பாமலரைச் சூட்டுகிறேன்.

வடலூர், 18—11—'53 — சுத்தானந்த பாரதி

நல்ல கிராமம்

நல்ல கிராமத்திலே — நமது
நாட்டின் உயிர் நிலையாம்
செல்வத் திருமகளின் — பசுந்திரு
செழித்த பூம்பொழிலாம் (நல்)

உழைக்கும் வேர்வையினால் — பயிர்
ஓங்கப் பசி நீங்கத்
தழைக்கும் காய்கனிகள் — என்றும்
தந்துயிர் தாங்கிடுமே (நல்)

காடுதோறுங் கழனி — ஏரிக்
கரைதோறும் பசுக்கள்
வீடுதோறுங் கலைகள் — வளர்
வீதிதோறும் விருந்து — மலி (நல்)

பாடுபட்டுப் பிழைக்கும் — தொழிலாளர்
பாட்டு நிறைகாற்று
ஏடுகற்ற புலவர் — அறிவொளி
இன்ப வுயிரூற்று (நல்)

தூய வுண வுடையால் — பொதுத்
தொண்டு செய் நல்லுறவால்
நேய ஒருமையினால் — அன்பு
நிலவும் இவ்வூரே (நல்)

கொட்டு முழக்கொலியும் — அழகிய
கோயில் மணியொலியும்
பட்டு நிலாவெளியில் — ஜய
பாரதக் கூத்தொலியும் — வளர் (நல்)

நல்ல கிராமத்திலே — நாம்
நல்லவராய் வாழ்வோம்
நல்ல கிராமத்திலே — நமது
நாட்டிசையை வளர்ப்போம் (நல்)

— சுத்தானந்த பாரதி

அலுமினியம்—தொழிலும்—உபயோகமும்.

அலுமினியக் கம்பெனியின் கட்டுரை

அலுமினியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு பிரபல சென்னை கம்பெனியார் "கிராமோதய"த்தின் சென்ற அக்டோபர் 15, நவம்பர் 1 தேதியிட்ட இதழ்களில் "ஆரோக்கியத்தை சீர் குலைக்கும் அலுமினியம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முறையில் ஒரு கட்டுரை அனுப்பிவைத்துள்ளனர். அதன் தலைப்பு "அலுமினியம் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பதா?- இல்லை-முற்றிலும் இல்லை" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை "கிராமோதயத்தில்" வெளியிடு மாறும் கோரப்பட்டிருக்கிறது. அதில் பல விஞ்ஞானிகளின் அபிப்ராயங்களும் தொகுத்து தரப்பட்டிருக்கிறது.

அவைகளில் சில கீழே தருகிறோம்:-

1. "சாதாரண சமையல் வேலைகளில் விரும்பத் தகாத அளவு அலுமினியம் கரைந்து விடுகிறது என்பதற்கு போதிய சாக்ஷியமில்லை"

"லான்ஸட்" லாபரடரி அறிக்கை (1913)

2) "சாதாரண சமையல் வேலைக்கு அலுமினியத்தை உபயோகப்படுத்தி அதில் தயாரித்த உணவை உட்கொள்ளுவதினால் ஆரோக்கியத்திற்கு எவ்வித கேடும் நேரிடுவதற்கில்லை"

"லான்ஸட்" (1913)

3) ப்ளாடினம் (Platinum) தங்கம் ஆகிய உலோகங்களைத்தவிர சமையல் பாத்திரங்கள் தயாரிக்க சிறந்தது அலுமினியம் என்றே கூறலாம் - அது வெள்ளியைக் காட்டிலும் சிறந்தது.

— பிரிட்டிஷ் மெடிகல் ஜெர்னல்.

இதே மாதிரி இன்னும் பல அபிப்ராயங்களை சேர்த்து மேற்படி கட்டுரை வரையப்பட்டுள்ளது. கடைசியாக அலுமினியத்தால் கிராமக்குயவர்கள் வேலை இழக்க வில்லை என்று முடிவும் செய்யப் பட்டிருக்கிறது!!

விஞ்ஞானிகளிடையே கருத்து வேற்றுமை

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மிர் மிராவின் கட்டுரையிலும் 1948-ம் ஆண்டு வரை அலுமினிய ஆராய்ச்சிகள் செய்துள்ள பல விஞ்ஞானிகளின் முடிவுகளை தந்துள்ளார். இம்மாதிரி விஷயங்களில் சாதாரணமாக காணப்படும் விஞ்ஞானிகளின் கருத்து வேற்றுமை இது விஷயத்திலும் காணப்படுகிறது.

ஜீவசத்தை அகற்றவும் பணம்! சேர்க்கவும் பணம்!

உதாரணமாக சமீபத்தில் வனஸ்பதி தடை சம்பந்தமாகவும் இதே விபரீதத்தை பார்த்தோம். வனஸ்பதி — தாவர எண்ணெயில் காணப்படும் ஜீவசத்துக்களை (Vitamins) அழித்து தயாராக்கப்படுகிறது

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

3 - JAN 1956

கிராமோதயம்

டிசம்பர் 1 1953

மனிதனும் — விஞ்ஞானமும்!

[மனிதனுக்கு இன்பமூட்ட விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள இயற்கை ரகசியங்கள் பல. ஆனால் இன்று மனிதன் என்றும் இல்லாத அளவு துன்பந் துடிக்கின்றான். விஞ்ஞான ரகசியங்களை மனிதன் தன் வாழ்க்கையை இன்பமயமாக்குவதற்கு ஈடுபடுத்த முடியவில்லை. இதற்கு காரணம் விஞ்ஞான ரகசியங்களை கண்டறிந்த மனிதன், தனது ஆத்ம ரகசியங்களை மறந்து விட்டதே! — ஆசிரியர்.]

இன்பமூட்டவந்த விஞ்ஞானம் துன்பமூட்டுகிறது!

இன்று, உலகம் தோன்றிய நாள் முதல் என்றுமே கண்டிராத அளவு, மனித இன்பத்திற்கு விஞ்ஞானம், வழி வகுத்திருக்கிறது. அதன் பின் மனிதன் ஓடி அலைகிறான். இருந்தாலும் மனிதன் இன்று இன்ப வாழ்க்கை நடத்துகிறான் என்று சொல்வதற்கில்லை. இன்று உலகில் தோன்றி, நடைபெறும் மகாயுத்தங்களைப் போல் என்றுமே நடந்ததில்லை. ஆன்றோருக்கு இக்காலத்திய போரின் கொடூரத்தை கற்பனை கூட செய்யமுடியாது. ஒரு தேசம், மற்றொரு முழு தேசத்திற்கும் எதிராக போர் புரிவதை அந்நாட்களில் சிந்தனை கூட செய்ய முடியாது. மற்ற தேசத்திலும் நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள்; பெண்கள், குழந்தைகள் இருக்கிறார்கள்; மரம், செடிகள், புத்தகாலயங்கள் இருக்கின்றன என்று எண்ணாமலே மேலிருந்து குண்டு மாரி பொழிந்து அனைத்தையும் சூன்யமாக்கி விடுகிறார்கள்! இதை பார்க்கும்பொழுது நமக்கு வியப்பாக இருக்கிறது!

இன்பம் தேடுகின்றான்; துன்பந் துடிக்கின்றான்

மனிதன் தனது சுகவாழ்வுக்குரிய வழிகளை பெருக்கிக் கொண்டுள்ளான். ஆனால் அமைதிக்குரிய வழிகளை வகுக்க அவகாசமில்லாமல் திண்டாடுகிறான். மனிதனுடைய கால் மட்டும் வீங்கினால் அது சுகமளிக்காது. ஒரு வியாதியாகவே கருதுகிறான். அதேபோன்றதுதான் அமைதியற்ற இன்ப வேட்கையும். இன்று இன்பத்தை நாடும் மனிதன் துன்பத்தையே அடைகிறான். பம்பாய் செல்ல வேண்டுமென்று விரும்புகிறான், ஆனால் கல்கத்தாவை நோக்கி செல்கிறான். இதில் ஏதோ பித்து இருக்கிறது.

விஞ்ஞானம் வளர வளர வியாதிகளும் வளருகின்றன

முன் நாட்களில் மனிதனுக்கு சஸ்திர கிரியை (Surgical Operation) செய்ய வேண்டுமானால் கன்றுகாலிகளை கை கால்களை கட்டுவது போல் கட்டிவிட்டு செய்வார்களாம். வயிற்றுக் கோளாறுகளுக்கு ரண சிகிச்சையே கிடையாதாம். இன்று மயக்க மருந்துகள் தோன்றியுள்ளதால் சஸ்திர கிரியை சர்வ சாதாரணமாகி விட்டது. இவ்வளவு இருந்தும் மனிதனிடம் நோய்கள் அதிகரித்துள்ளதா? குறைந்திருக்கிறதா என்று வினவினால் அதிகரித்திருப்பதாகவே பதில் சொல்லுவான்!!

இன்று விஞ்ஞானத்தின் சுக சாதனங்களின் பங்கீடும், உபயோகமும் தவறான வழியில் நடைபெற்று வருகின்றன. [illegible] மீது எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சாராயமும் சிகரெட்டும்?

பொருளாதார சாஸ்திரம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கூறுகிறது. ஆனால் இதற்காக என்ன செய்வது? அதிகம் பழம் சாப்பிடலாம்; அதிகம் துணி உடுத்தலாம்; அதிகம் சிகரெட் பிடிக்கலாம்; அதிகம் சாராயம் குடிக்கலாம்; அதிகம் தேன் அருந்தலாம்; இவை யாவும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திவிடும். பால், காற்று, சாராயம் எதை அதிகமாக உபயோகித்தாலும் தரம் உயர்ந்துவிடும். ஆனால் எந்த பொருளின் உபயோகத்தை அதிகரிப்பது, எதன் உபயோகத்தை குறைப்பது என்பதை யார் நிர்ணயிப்பது? இதை நாம் தான் செய்வோம். நாம் துணியின் உபயோகத்தை அதிகப்படுத்தி, காற்றை குறைத்துக் கொள்வதென்று முடிவு செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்நாட்களில் சிறு குழந்தைகளுக்குக்கூட ஆடை அணிவிக்கின்றனர். இதனால் அவைகளின் தோல்மீது கதிரவன் கதிர்கள் படுவதே சாத்திய[illegible]ல்லை. இதன் பயனாக அவைகளின் எலும்[illegible]கள் வீரியமிழந்து குழந்தைகள் [illegible]லஹீனமடைகின்றன. துணியின் உபயோகத்[illegible] அதிகரித்து சூரிய கிரணங்களை குறைத்த[illegible]ன் விளைவு என்னவாயிற்று!!

கணக்கின்றி பருகினால் அமுதும் விஷமே

பால் நல்ல உணவு: ஆனால் அதையும் கணக்கின்றி உட்கொண்டால் தீங்குதரும். ஆகையால் தீய பொருட்களின் உபயோகத்தை அதிகரிக்காமலிருப்பதும், நல்ல பொருட்களின் உபயோகத்தை எந்த அளவுக்கு அதிகரிப்பது என்பதையும், நிர்ணயிக்கும் சக்தி விஞ்ஞானத்திற்கு இல்லை. இந்த சிறப்பு மனிதனின் ஆன்மஞான (தன்னறிவு)த்திற்குண்டு! எந்த பொருளை எவ்வளவு உண்ணலாம் என்பதை விஞ்ஞானம் கூறமுடியாது. நாக்கினாலும் எந்த பொருள் நல்லது, எவ்வளவு சாப்பிட வேண்டும் என்பதை சொல்லமுடியாது; அப்பொருட்களின் ருசியைத்தான் சொல்ல முடியும். அவைகளில் கொண்டுள்ள விருப்பு, வெறுப்புகளை ஆன்மாவே நிர்ணயிக்கும்.

விஞ்ஞானமும் ஆன்ம ஞானமும்

இங்கு ஆன்ம ஞானத்தின் கடிவாளம் இருந்தால்தான் விஞ்ஞானம் மனிதனுக்கு பயன்படும். சிலர் நான் விஞ்ஞான விரோதி என்று கூறுகிறார்கள்! ஆனால் உண்மை அப்படியல்ல. நான் விஞ்ஞானத்தை மிகவும் விரும்புகிறேன். இயற்கையின் ஆக்க சக்திகளைப் பற்றிய அறிவை வளர்த்து, அதை நம் வசப்படுத்துவது மிக்க நல்லதே! ஆனால் அதன் உபயோகம், பங்கீடு, கட்டுப்பாடு, முதலியன எப்படி இருக்கும் என்பதையும் நான் தீர்மானமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதை இன்று மனிதன் அறியவில்லை. அறிந்திருந்தால் தவறான முறையில் அறிந்திருக்கிறான்!

இவைகளை அறியாமலிருப்பதாலும், தவறாக அறிந்திருப்பதாலும் இன்று மனிதன் துன்பப்படுகிறான்!

போருக்கு ஒரு லக்ஷியமில்லை!!

மனிதன் உலக[illegible]த்தம் நடத்துவதில்லை. அவன் அதில் மூழ்கி[illegible]டுகிறான், உலக நாடுகளின் ஏனைய தலைவர்களு[illegible]ந்த காலவெள்ளத்தில் அடித்துக்கொண்[illegible] செல்கின்றனர். ஸ்ரீ சர்ச்சிலிடம் சென்ற மகாயுத்தத்தின் பொழுது பன்முறை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

CONNEMARA ... 3-JAN 1956 MADRAS

தமிழ்நாட்டில் தீபாவளி கதர் விற்பனை.

திருப்பூர் விபாக்

கிளைகள் பெயர்.	1952 ரூ.	1953 ரூ.
கோயமுத்தூர்	14,128	23,042
தாராபுரம்	6,329	5,320
ஈரோடு	4,360	5,840
கொடுமுடி	3,138	5,178
சிவகிரி	4,156	4,070
கோபிசெட்டிபாளையம்	7,264	9,505
காந்திநகர் உற்பத்தி	1,375	6,920
காங்கயம்	11,468	25,489
ஊதியூர்	2,649	2,346
கொடுவாய்	4,058	4,910
குண்டடம்	6,906	12,478
மூலனூர்	2,603	10,264
அரிக்காரன்வலசு	1,812	3,058
நம்பியூர்	1,470	3,189
தைலாம்பாளையம்	2,465	7,550
படியூர்	4,681	8,615
பல்லடம்	3,690	6,347
கேத்தனூர்	3,210	3,279
பு. புளியம்பட்டி	2,467	6,529
வீரபாண்டி உற்பத்தி	2,343	7,039
திருப்பூர் விற்பனை கிளை	5,613	7,165
ஊத்துக்குளி	1,427	8,485
சென்னிமலை	13,026	6,006
குன்னத்தூர்	2,746	6,146
உதகமண்டலம்	1,283	3,027
ஆத்தூர்	1,633	1,863
சிதம்பரம்	11,076	14,125
திண்டிவனம்	2,654	4,090
திருக்கோயிலூர்	1,927	4,001
திருப்பாப்புலியூர்	7,391	9,472
திருவண்ணாமலை	3,114	2,434
வேலூர்	5,229	4,091
	1,47,691	2,31,873

தஞ்சை விபாக்

	1952 ரூ.	1953 ரூ.
அதிராம்பட்டினம்	2,083	884
கும்பகோணம்	22,811	28,887
மன்னார்குடி	8,683	12,043
மாயவரம்	11,488	12,037
நாகபட்டணம்	5,199	7,348
பட்டுக்கோட்டை	7,315	7,026
பூவுத்தக்குடி	1,411	1,900
தஞ்சாவூர்	8,283	12,717
திருவையாறு	1,343	1,946
திருவாரூர்	13,747	14,586
கரூர்	4,883	4,628
காட்டுமன்னார்	653	11,591
செந்துரை	976	532
தேனூர்	1,573	1,244
திருச்சிராப்பள்ளி	22,904	36,441
திருமாந்துரை	107	529
	1,13,359	1,54,329

மதுரை, ராமநாதபுரம் விபாக்

	1952 ரூ.	1953 ரூ.
மதுரை விற்பனை கிளை	49,222	60,373
மதுரை உற்பத்தி ,,	—	1,146
திண்டுக்கல்	7,375	6,437
பழனி	2,187	5,203
பெரியகுளம்	2,195	3,803
திருமங்கலம்	3,361	3,253
வடக்கம்பட்டி	2,557	1,600
செ. புதுப்பட்டி	1,600	2,077
பேரையூர்	3,210	3,912
காரைக்குடி	10,219	10,389
பரமக்குடி	4,477	6,317
அருப்புக்கோட்டை	3,613	4,093
விருதுநகர்	4,769	5,064
சாத்தூர்	2,157	2,370
ஸ்ரீவில்லிப்புத்தூர்	8,295	8,618
மம்சாபுரம்	1,220	1,426
வ. புதுப்பட்டி	4,175	7,105
சுந்தரபாண்டியம்	3,064	4,703
சிவகாசி	2,094	3,102
இராஜபாளையம்	5,675	10,522
முகவூர்	872	1,768
ஆலங்குளம்	—	479
கம்பம்	—	3,445
	1,22,337	1,57,205

திருநெல்வேலி விபாக்

	1952 ரூ.	1953 ரூ.
கோவில்பட்டி	3,851	6,613
காலாங்கரைப்பட்டி	576	2,277
கழுகுமலை	1,245	3,171
சங்கரன்கோவில்	4,023	5,486
புதுப்பட்டி	811	3,155
கரிவலம்வந்தநல்லூர்	1,354	4,565
புளியங்குடி	2,316	4,669
கிழப்பாவூர்	766	1,700
வீரவநல்லூர்	2,560	1,074
திருநெல்வேலி	16,460	20,789
தூத்துக்குடி	7,951	8,132
திருச்செந்தூர்	3,449	4,467
திசையன்விளை	4,559	6,500
ஏரல்	2,870	3,517
சிப்பிப்பாரை	1,848	7,628
விளாத்திகுளம்	1,661	5,501
தென்காசி	3,583	4,347
வள்ளியூர்	—	1,023
கடம்பூர்	—	2,429
ஏழாயிரம்பண்ணை	—	1,253
	59,883	98,296

	1952	1953
சென்னை விபாக்	ரூ. 24,408	ரூ. 52,440
தமிழ்நாட்டில் மொத்தம்	ரூ. 4,67,678	ரூ. 6,94,143

3-JAN 1956 MADRAS

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அலுமினியம்—தொழிலும்—உபயோகமும்

என்று கூறியதற்கு எதிராக பலமான ஆட்சேபம் எழுந்தது. ஆனால் சமீபத்தில் வனஸ்பதியில் கட்டாயமாக ஜீவசத்துக்களை (Vitamins) சேர்த்து தான் விற்பனைக்கனுப்ப வேண்டும் என்று ஒரு சர்க்கார் உத்திரவு கூறியிருக்கிறது! விந்தை பாருங்கள்! எண்ணெயிலுள்ள சகல ஜீவசத்துக் களையும் முதலில் அழித்து வனஸ்பதி தயாரிப்பது! பிறகு அதில் ஜீவசத்துக்களை சேர்ப்பது! இரண்டுக் கும் சேர்த்து மக்கள் விலை கொடுக்க வேண்டும்!

கிருமி நாசினிகளின் தர்மசங்கடம்

அது போல் (Antibiotics) கிருமி நாசினிகள் என்று கூறப்படும் சிலவகை மருந்துகள் (Streptomycin, Auromycin, Penicillin, D. D. T.) துடர்ந்து பயன் படுத்துவதினால் ஜீவ அணுக்கள் அழிவதற்கு பதில் இம்மருந்துகளையும் எதிர்க்கத் தகுந்த சக்தி வாய்ந்தவைகளாகி விடுகின்றன என்று ஒரு சாரார் கூறுகின்றனர்!! மறு சாரார் இம்மருந்துகளை சமயம் பார்த்து உபயோகித்தால் சிறந்த பயனே அளிக்கும் என்கின்றனர்!!

கிராமக்கைத்தொழில்கள் அழிந்ததில் சந்தேகமில்லை

ஆகையால் விஞ்ஞானிகளின் இந்த மாறுபட்ட யோசனைகள் காரணமாக மக்கள் மனதில் ஏற் படும் குழப்பத்தை மக்களே கால கிரமத்தில் தீர்த்துக்கொள்வார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி மிர் மிரா - தனது கட்டுரையில் கூறியுள்ள படி கிராமக்குயவர்களின் மண்பாண்டத் தொழிலை அலுமினியம் பெரிதும் பாதித்திருக்கிறது என்ப தில் சந்தேகமில்லை.

அலுமினியத்திற்கு வேறு எவ்வளவோ துறைகளிருக் கின்றன

அலுமினியத்திற்கு கைத் தொழில் ரீதியில் வேறு பல வித உபயோகங்கள் இருக்கும் பொழுது கிராமக்குடில்களில் நடக்கும் சிறு கைத்தொழில் களுடன் ஏன் போட்டியிட்டு அவைகளை நசுக்க வேண்டும்? கிராமக் கைத்தொழில்களின், அபி விருத்திக்காகவோ, வேலையில்லாத் திண்டாட் டத்தை போக்கும் வழி வகைகள் வகுப்பதற்காக வோ, நாம் முயற்சி செய்யும் பொழுது அலுமினி யம், பாத்திரத்தொழிலில் ஈடுபடுத்தப் படாமலிருப் பதே நலம் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக் கிறது! இதனால் இருபிரச்னைகளும் ஓரளவுக்கு தீர்க்கப்படலாம். செம்பு, பித்தளை, பாத்திரங்கள் தயாரிக்கும் சிறு கிராமத்தொழிலாளிகளும் சிறிது பயனடையலாம்.

— ப. கோவிந்தசாமி

(10-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மனிதனும் — விஞ்ஞானமும்!

"இந்த மகாயுத்தம் எதற்காக?" என்று கேட்கப் பட்டது. அவர் இந்த கேள்விக்கு பல நாட்களுக்கு பதில் கூறவே இல்லை. கடைசியில் உலக யுத்தத் திற்கு ஒரு உத்தேசமும் இருக்க முடியுமா? என்று மாற்று கேள்வியை போட்டு பதிலளித்தார்! அதன் ஒரே உத்தேசம் யுத்தத்தில் வெற்றி பெறுவது!! இதன் பொருள் யாதெனில் இந்த சண்டைகள், யுத்தங்களுக்கு ஒரு உத்தேசமும் இல்லை! தேசம் வேறு வழியின்றி போர் புரிகிறது! இயந்திரம் போல் மனிதன், மனிதனை சுட்டு வீழ்த்துகிறான்!

பாரத சக்தி - ஆன்ம சக்தியை ஆதாரமாகக்கொண்டது

ஆனால் இன்று நமது தேசம் படை பலத்திலோ ஆயுதபலத்திலோ, சக்தியற்றிருந்த பொழுதிலும் அதன் குரல் உலகெங்கும் எதிரொலிக்கிறது. இதற்கு காரணம் நம்மிடம் வேறு ஒரு விதமான சக்தி இருக்கிறது என்பதே. பாரத தேசத்தில் தான் ஒரு அபூர்வமான ஆயுதத்தை ஏந்தி ஒரு தேசமே தனது விடுதலையை, கைப்பற்றிய விந்தையை ஒரு மகாபுருஷர் செய்து காட்டினார். உலக சரித்திரத்தில் நமது விடுதலை இயக்கம் விசேஷம் வாய்ந்ததென்று இடம் பெறும். ஆனால், இன்று, உலக அரங்கில் நமது குரல் மிகவும் பல ஹீனமானதாக இருக்கிறது. ஏனெனில் பாரத தேசத்தின் சகல பிரச்னைகளும் தீர்க்கப்படாமலே இருக்கிறது. நாம் இந்த பிரச்னைகளை எவ்வாறு சமாளிக்கின்றோம் என்பதை பொருத்திருக்கிறது நமது தேசத்தின் எதிர்கால உலக அந்தஸ்து. நாம் நமது பிரச்னைகளை பலாத்கார ரீதியில் தீர்ப்போ மானால் மற்ற நாடுகளை போலத்தான் பாரதமும் என்று உலக நாடுகள் முடிவு செய்யும்.

ஆனால் நமது பிரச்னைகளை ஆன்ம சக்தி, அஹிம்சை ஆகிய வழிகளில் தீர்க்க முயன்றோ மானால் இந்தியா தப்புவதோடன்னியில், உலக நாடுகளுக்கே வழிகாட்டியாகவும் முன்னேறலாம்!!

— விநோபா

இந்தியாவின் கல்வி நிலை

* * * இந்தியாவில் 6 முதல் 11 வரை வய துடைய சிறுவர்களில் நூற்றுக்கு நாற்பது பேர் களுக்கு (40%) தான் கல்வி கற்க வசதியிருக்கிறது. மற்ற 60 சதவிகிதத்தினர் விரும்பினாலும் கல்வி கற்க வசதியில்லை!

* * * அதே மாதிரி 11 முதல் 17 வரை வய துடைய வாலிபர்களில் நூற்றுக்கு பத்துப் பேர் களுக்கு (10%) தான் கல்வி கற்க வசதியிருக்கிறது. பாக்கி 90 சதவிகிதத்தினர் விரும்பினாலும் படிக்க வசதிகள் இல்லை.

* * * 17 முதல் 23 வரை வயதுடைய வாலிபர் களில் 1000-த்திற்கு 9 பேர்களுக்கே கல்வி கற்க ஏற்பாடுகள் இருக்கிறது. (0.9%) பாக்கி 991 (99.1%) பேர்களுக்கு விரும்பினாலும் வசதியில்லை.

* * * இப்படி யிருந்தும் இந்தியாவில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, கனடா தேசத்தின் மொத்த ஜனத்தொகையைக் காட்டி லும் அதிகம். ஆகையால் நமது பெருமைகளில் இதுவும் ஒன்றாகவே கருதப்படவேண்டும்!!!

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்படுகிறது.)

இந்த இதழில்

கலைவாணியின் அருள்மொழி — சுத்தானந்த பாரதி 9
அலுமினியம்-தொழிலும்-உபயோகமும் — ப. கோவிந்தசாமி 9
மனிதனும் - விஞ்ஞானம் — விநோபா 10
தமிழ்நாட்டில் தீபாவளி கதர் விற்பனை 11

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.
Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.